### பனை மரத்தின் சிறப்பினை விளக்கிடும்

# ‘நெட்டே நெட்டே பனைமரமே’ காலப்பேழை புத்தகம்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஜூன் 29 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.6.2023) வேளாண்மைஉழவர் நலத்துறையின் சார்பில் பனையின் சிறப்பினை பொதுமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள “நெட்டே நெட்டே பனைமரமே” என்ற காலப்பேழை புத்தகத்தை வெளியிட்டார்.

பனை மரம், அனைத்து பாகங்களையும் மானுடத்திற்குக் கொடையாய் அளிக்கும் அற்புதமான மரமாகும். அதன் குருத்தோலை தோரணம் கட்டவும், அழகியல் பொருட்கள் செய்யவும் பயன்படுகிறது. சாரை ஓலை, கூடை முடையவும், பாய் பின்னவும் உதவுகிறது. பச்சை மட்டை வேலி அமைக்கவும், நார் எடுக்கவும் உதவுகிறது. பனங்காய் நுங்கும், பனம்பழமும் தருகிறது. பனங்கொட்டை, கிழங்காக மாறி உணப் பயன்படுகிறது. பாளை, பதநீர் பெற உபயோகமாகிறது. ஓலை கூரை வேயவும், பதநீர், கஞ்சி போன்றவற்றை ஊற்றிக் குடிக்க உதவும், பட்டை பின்னவும் பயன்படுகிறது.

உச்சிப்பகுதி, மரத்தொட்டி செய்ய உதவுகிறது. பத்தை மட்டை தும்பு எடுக்கவும், தரை தேய்க்கும் பிரஷ் செய்யவும் பயன்படுகிறது. நடு மரம், உத்தரம் செய்ய உதவுகிறது. தூர்ப்பகுதி, வட்ட வடிவிலான பத்தலாக பயன்படுகிறது. வேர் மழைக்காலங்களில் நிகழும் மண்ணரிப்பைத் தடுக்க உதவுகிறது.

இத்தகைய சிறப்புமிக்கதும் தமிழ்நாட்டின் மாநில மரமான பனையின் முக்கியத்துவம் கருதி, 2021-22ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலாவது வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், பனைமரத்தின் எண்ணிக்கையினை அதிகரிக்கவும், பனை பொருட்களை மதிப்புக் கூட்டுதல் மூலம் பனைத்தொழிலை மேம்படுத்தவும், பனை மேம்பாட்டு இயக்கம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக இவ்வியக்கம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, தொன்றுதொட்டு தமிழரின் வாழ்வோடு இணைந்து பல பயன்களை அளித்து வரும் பனையின் சிறப்பு குறித்து பொதுமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையிலும், பனையின் சிறப்பினைப் போற்றும் வகையிலும், தூத்துக்குடி, இராமநாதபுரம் போன்ற பனை மரங்கள் அதிகம் காணப்படும் மாவட்டங்களில் கள ஆய்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், சேகரிக்கப்பட்ட செய்திகளை உள்ளடக்கிய “நெட்டே நெட்டே பனைமரமே” என்ற தலைப்பிலான காலப்பேழை (Coffee Table) புத்தகம் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்றைய தினம் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறைச் செயலாளர் சி. சமய மூர்த்தி, வேளாண்மை உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர்.நந்தகோபால், வேளாண்மை ஆணையர் டாக்டர் எல்.சுப்பிரமணியன், வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா. பிருந்தா தேவி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கனிமவளங்களை சட்டவிரோதமாக எடுப்பது குற்றம்!

# வாகன உரிமையாளர்கள் உரிமம் ரத்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, ஜூன் 29 -**

**கனிமவளங்களை சட்டவிரோதமான முறையில் வெட்டி எடுப்பதும் விநியோகிப்பதும் மக்கள் விரோத செயலும், குற்றச் செயலுமாகும். விதிகளை மீறும் வாகன உரிமையாளர்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரித்துள்ளார். இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

இந்தியாவில் கனிமவளம் மிகுந்த மாநிலங்களில் தமிழ்நாடு மிக முக்கியமானது. தாது வளங்களின் பயன்கள் அனைத்து மக்களுக்கும் பொதுவானவை. இந்த வளங்களை சட்ட விரோதமான முறையில் வெட்டி எடுப்பதும் விநியோகிப்பதும் மக்கள் விரோதச் செயலும் குற்றச் செயலுமாகும். இத்தகைய கனிமவளக் கடத்தல்களைக் கண்காணித்து, அதைக் கட்டுப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. கனிமவளங்களைப் பாதுகாக்கவும், அவற்றை முறையான அளவில் வெட்டி எடுப்பதன் மூலம் அரசுக்கு உரிய வருவாய் கிடைக்கவும், கனிம வளங்களைப் பிற மாநிலங்களுக்குக் கடத்துவதைத் தடுக்கவும் தமிழ்நாடு அரசு 2011ல் சட்டம் இயற்றியது.

தற்போது உரிமம் அளிக்கப்பட்ட குவாரிகளில் வெட்டியெடுக்கப்படும் கனிமவளங்களின் அளவை ஆளில்லா விமானங்கள் (டிரோன்கள்) மூலம் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதுதவிர கனிமவளங்களைப் பாதுகாக்கவும், கனிம வளச் சுரங்கங்கள் அமைந்துள்ள பகுதிகளின் மேம்பாட்டுக்காகவும், அப்பகுதிகளில் நலத்திட்டங்களைச் செயல்படுத்தவும் ரூ.1,224.87 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மாநிலத்தின் சில பகுதிகளில் சட்ட விரோதமாகக் கனிமவளங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெட்டி எடுக்கப்படுகிறது; அதைத்தடுக்கவும் அரசு தீவிரக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நிலவியல் மற்றும் கனிமவளத்துறை ஆணையர் கன்னியாகுமரி, தென்காசி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள 38 சுங்கச்சாவடிகளில் திடீர் ஆய்வுகளை மேற்கொள்ள சிறப்புக் குழுக்களை நியமித்தார். இந்தச் சிறப்புக் குழுக்கள் மாநில எல்லையை தீவிரமாகக் கண்காணித்து தங்களது அறிக்கையைத் தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களுக்கு உடனடியாக அளிக்கவும் உத்தரவிட்டிருந்தார். இதையடுத்து, மாநில எல்லைகளில் அமைந்துள்ள மேற்கண்ட நான்கு மாவட்டங்களிலும் கனிமவளங்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களைக் கண்காணிக்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டன.

மேலும், இதர மாவட்டங்களிலும் கனிம வளங்கள் ஏற்றிச்செல்லும் வாகனங்களை கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏப்ரல் முதல் ஜூன் 25, 2023 வரை அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக கனிமங்களை ஏற்றிச்சென்ற 431 வாகனங்கள் பறக்கும் படை மற்றும் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு ரூ.1,76,93,348 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் சட்டவிரோதமாக கனிமங்களை ஏற்றிச்சென்ற 77 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு 39 வழக்குகள் (எப்.ஐ.ஆர்.) பதிவு செய்யப்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக கனிமங்களை ஏற்றிச் சென்ற 39 வாகனங்கள் பறக்கும்படை மற்றும் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு ரூ.16,34,100 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் சட்ட விரோதமாக கனிமங்களை ஏற்றிச் சென்ற 105 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு 69 வழக்குகள் (எப்.ஐ.ஆர்.) பதிவு செய்யப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக கனிமங்களை ஏற்றிச்சென்ற 72 வாகனங்கள் பறக்கும்படை மற்றும் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டு ரூ.24,21,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் சட்ட விரோதமாக கனிமங்களை ஏற்றிச்சென்ற 17 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு 11 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேனிமாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக கனிமங்களை ஏற்றிச்சென்ற 10 வாகனங்கள் பறக்கும்படை மற்றும் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு ரூ.3,80,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் சட்டவிரோதமாக கனிமங்களை ஏற்றி சென்ற 17 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாகவும், சட்டவிரோதமாகவும் கனிமங்களை ஏற்றிச் சென்ற 48 வாகனங்கள் பறக்கும்படை மற்றும் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டு வழக்குகள் (எப்ஐஆர்) பதிவு செய்யப்பட்டுள்ளன.

தென்காசி மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக கனிமங்களை ஏற்றிச் சென்ற 27 வாகனங்கள் பறக்கும்படை மற்றும் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டு ரூ.9,08,480 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் சட்டவிரோதமாக கனிமங்களை ஏற்றி சென்ற 24 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டவிரோதமாக கனிமங்களை ஏற்றிச்சென்ற 49 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், இதர மாவட்டங்களிலும் விதிகளை மீறும் வாகன உரிமையாளர்கள் மீது வழக்குப் பதிந்திடவும், வாகன ஓட்டுநர்களின் உரிமத்தை ரத்து செய்யவும்

அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், அதேசமயம் தாதுவளங்களின் மூலமாகக் கிடைக்கும் வருவாய் அனைத்து மக்களுக்கும் பயன்தரும் வகையில் தான் கனிமவளங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதிபூண்டுள்ளது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்!

## சென்னை ஐகோர்ட் தீர்ப்புக்கு வைகோ வரவேற்பு!

*சென்னை, ஜூன் 29 -*

*அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வரவேற்றுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு:- பிறப்பின் அடிப்படையில் பாகுபாடு காட்டாமல், உரிய பயிற்சி பெற்ற அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர் பணியில் நியமிக்கலாம் என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.*



*சேலம் சுகவனேஸ்வரர் கோயில் அர்ச்சகர் நியமனத்திற்கு எதிராக சுப்பிரமணிய குருக்கள் தொடர்ந்த வழக்கில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் இந்த தீர்ப்பினை அறிவித்துள்ளார். திராவிட மாடல் அரசு நடத்தும் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு மீண்டும் அர்ச்சகர் சட்டத்திற்கு புத்துயிர் கொடுத்துள்ளது.*

*இந்த சூழலில், தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் பாராட்டத்தக்க தீர்ப்பினை அளித்துள்ளது. அர்ச்சகர் பயிற்சியை முறையாகப் படித்து, அரசு நடத்திய தேர்வில் தேர்ச்சி பெற்று, பணி இல்லாமல் வேதனையோடு வாழ்க்கை நடத்திக்கொண்டு இருக்கின்ற அர்ச்சகர்களை தமிழ்நாடு அரசின் அறநிலையத்துறை உடனடியாக பணியில் நியமிக்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

### சோ.கருப்பையா தலைமையில்

# காரைக்குடி 8வது வட்டத்தில் நல உதவிகள் - பொதுக்கூட்டம்!

## மு.தென்னவன் சிறப்புரை! நிர்வாகிகள் பங்கேற்பு!

*காரைக்குடி, ஜூன் 29 -*

*சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகரம் 8வது வட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது, இவ்விழாவிற்கு 8வது வட்டக் கழக செயலாளர் சோனா.கருப்பையா தலைமையிலும் நகர துணைச் செயலாளர் சொ.கண்ணன் எம்.சி., முன்னிலையிலும் மாநில இலக்கிய அணி புரவலர் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், நகர் மன்ற தலைவர் சே.முத்துத்துரை, நகர் மன்ற துணைத் தலைவர் நா.குணசேகரன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள். நகரக் கழக நிர்வாகிகள் சன் சுப்பையா, உதயம் ராசு, பெரிவைரவன், சே.சொக்கலிங்கம், அ.சேவியர், போஸ், குணசேகரன், நகர மன்ற உறுப்பினர்கள் துரை, நாகராஜ், கா.கலா, மலர்விழி, பழனியப்பன், தனம்சிங்கமுத்து, லில்லிதெரஸ், ராணிஜெய்னுதின் சேட், மெ.பழனியப்பன், ராம அன்பழகன், ஆர்.கே.முனீஸ்வரன், மெ.கார்த்திகேயன், எம்.எஸ். கருப்பையா, நகர இளைஞரணி நிர்வாகிகள், ஜெயதுரை, சே.தினகரன், மாணவர் அணி நிர்வாகிகள் என்.அசரப், சி.மோகன், அண்ணாநகர் சந்திரன், சோனா சசிகுமார், ம.பாண்டி, வட்டக் கழக நிர்வாகிகள் எம்.எஸ். நாகலிங்கம், எம்.கர்ணன், ஏ.எல்.ரவி, டி.முத்துராமலிங்கம், க.ஜெயபால், காசிம் பாய், அழ.சுந்தர், சுபதங்கவேல், கரு.கணேசன், காஜா மைதீன், மீ.கணேசன், சா. செந்தில்நாதன், வீர.காளிதாஸ். சோம.சரவணன், பெயிண்டர் சந்திரன், ஆட்டோ செந்தில், மா. பாபு, குருவி சுரேஷ், வசந்த், லேத்சோலை, சொ.ராதாகிருஷ்ணன், மகளிர் அணி நிர்வாகிகள், கரு.சித்ரா, அழகு மீனாள், ஆர்.ராணி, க.சுப்புலட்சுமி, ரா.தங்கவேல், ரா.கனகா, ச.மாக்கவள்ளி உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கழகத் தோழர்கள், இவ்விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர்.*

*மேலும் இந்நிகழ்வில் ஏ. எம்.அபி குழுவினரின் கழக இன்னிசை பாட்டுக் கச்சேரி முன்னதாக நடைபெற்றது. இந்நிகழ்வின் இறுதியாக வட்டக் கழகச் செயலாளர் மு.நடராஜன் நன்றியுரை யாற்றினார்.*



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி சிவகங்கை மாவட்டம், காரைக்குடி 8வது வட்டத்தில் 1000 பேருக்கு நலஉதவிகள் வழங்கல் மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் சோ.கருப்பையா தலைமையில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் சிறப்புரையாற்றினார். நகர மன்றத் தலைவர் சே.முத்துதுரை, சொ.கண்ணன் எம்.சி., சன்.சுப்பையா, உதயம் ராசு உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# இன்னும் ஆயிரம் பிறைகள் காண்கவே!



**தொ**ண்ணூறு வயதில் “ எண்ப தாண்டுகள்”
தொடரும் அரிய பொதுவாழ்வு!
துளியும் இல்லை மனச்சோர்வு!
கண்ணாரக் காணும் பொலிவும் வலிவும்
கலந்து மிளிரும் எழிலோடு
களமா டுகிறார் துணிவோடு!

அண்ணல் எங்கள் திராவிடத் தந்தை
ஐயா பெரியார் தினவோடு.. இன்னும்
ஆயிரம் பிறைகள் கண்டு வாழ்கவே
“ஆசிரி யர்”உயர் புகழோடு!

ஈரைந்து வயதினிலே மேடை ஏறினார்!
இளங்குருளை! தமிழ்ப்பகையைக் கண்டு சீறினார்!
போராடி அடக்குமுறைத் தடைகள் மீறினார்!
புவிபோற்றும் பெரியாராய் இன்று மாறினார்!

“அனைவருக்கும் அனைத்தும்”எனச் சூளு ரைப்பவர்!
ஆதிக்க ஆரியத்தின் வேர றுப்பவர்!
முனைமுகத்தில் இனஉரிமைப் போர்தொ டுப்பவர்!
முதல்வர்எங்கள் “ தளபதி”க்குத் தோள்கொ டுப்பவர்!

சீற்றமிகு சினவேங்கை குணம்வி ளங்குமே!
செந்தமிழர் வாழ்வுயரச் செயல்து லங்குமே!
வேற்றுமுகாம் மாற்றுமுகாம் நிலைகு லைந்து டுங்குமே!
“வீரமணி” எனில்,பகைவர் குலைந டுங்குமே!

ஒருவர்எங்கள் “ஆசிரியர்” உழைப்பு, தியாகத்தில்!
உவமைசொல்ல எவருமில்லை மனித நேயத்தில்!
வருவர்இவர் போற்சிலரே இந்த ஞாலத்தில்!
வாழ்வதுநம் பெருமை,இவர் வாழும் காலத்தில்!

தொண்ணூறு வயதில் “ எண்ப தாண்டுகள்”
தொடரும் அரிய பொதுவாழ்வு!
துளியும் இல்லை மனச்சோர்வு!
கண்ணாரக் காணும் பொலிவும் வலிவும்
கலந்து மிளிரும் எழிலோடு
களமா டுகிறார் துணிவோடு!

அண்ணல் எங்கள் திராவிடத் தந்தை
ஐயா பெரியார் தினவோடு.. இன்னும்
ஆயிரம் பிறைகள் கண்டு வாழ்கவே
“ஆசிரி யர்”உயர் புகழோடு!



**கவிச்சுடர் கவிதைப் பித்தன்**